# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE

## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.1

**<u>OS.NO.55/2025</u>**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சண்முகம் |
| Father/Husband Name | : | திரு.கோபால் |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>விசாரணை தொடங்கிய நேரம் :</u> 11.44 A.M

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. தேவராஜ் என்னுடைய அண்ணன். விநாயகம் என்னுடைய அண்ணன். என் பெயரிலும் பிரதிவாதிகள் பெயரிலும் கூட்டாக உள்ள சொத்து பாகம் கோரியுள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நானும் என்னுடைய சகோதரர்களான 1, 2 பிரதிவாதிகளும் கூட்டாக தொழில் செய்து வந்துள்ளதாக சொல்லியுள்ளேன். முதல் விசாரணை வாக்குமூலம் பக்கம் 2ல் ஸ்ரீசக்தி மோட்டார்ஸ் என்ற வியாபாரத்தை கதவு எண் 18/2, தாங்கள் மட்டும் நடத்தியதாக குறிப்பிட்டுள்ளீர் என்றால், சரிதான். மேற்சொன்ன கதவு 18/2 கொண்ட கடை தங்களுடைய அண்ணி 1ம் பிரதிவாதியின் மனைவியான சரளாதேவி பெயரில் உள்ளது என்றால்,

சரிதான். அந்த சொத்தை தாங்களும் 1,2 பிரதிவாதிகளும் கூட்டாக சம்பாதித்து விலைக்கு வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளீர் என்றால், சரிதான். ஆனால் அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

2. 2வது பக்கத்தில் பாரா 3ல் ஸ்ரீசக்தி எண்டர்பிரைசஸ் 1ம் பிரதிவாதியால் கதவு எண்.21, டிஆர்எம் காம்ளக்ஸில் நடத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அதே போல் 2ம் பிரதிவாதி கதவு எண் 15/6, பைபாஸ் சாலை என்ற கடையில் ஸ்ரீசக்தி ஆட்டோ சென்டர் என்ற கடை நடத்தி வந்தார் என்று சொல்லியுள்ளீர் என்றால், சரிதான். தாங்களும் 1, 2 பிரதிவாதிகளும் கூட்டாக தொழில் செய்து வருவாய் ஈட்டியதற்கு எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் முதல் விசாரணை பாரா 4ல் தாங்கள் பல ஆண்டுகளாக கதவு எண் 18/2 பைபாஸ் காலையில் வேலூரில் உள்ள கடையில் சொந்தமாக தையல் தொழிலையும் ஆயில் விற்பனை தொழிலையும் செய்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

3. தாவா சொத்தை விலைக்கு வாங்கியதற்கான அசல் கிரையபத்திரம் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. அந்த சொத்தை நானும் பிரதிவாதிகளும் சேர்ந்து வேலூரில் உள்ள யூனியன் பேங்க் கிளையில் ரூ.23,00,000/- கடனுக்கு அடமானம் வைத்துள்ளோம். அந்த அசல்பத்திரம் மேற்படி வங்கியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 13.12.2017 தேதியில் மேற்படி வீதம் அடமானம் வைத்து கடன் வாங்கினோம். அவ்வாறு அந்த சொத்தை ஆவணம் ஒப்படைப்பு செய்து கடன் பெறும் போது எழுதி கொடுத்த

ஆவணம்ஒப்படைவு ஆவணத்தின் நகல் தற்போது என்னிடம் காட்டப்படும் 13.12.2017 தேதியிட்ட அடமான ஆவண நகலில் சண்முகம் என்று காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான். அந்த ஆவணம் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வீதம் தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்ற விவரத்தை தாவாவில் சொல்லவில்லை என்றால், சரிதான். மேற்படி கடனுக்கான தொகைகளை தாங்கள் திருப்பி செலுத்தவில்லை என்றாலும், பிரதிவாதிகள் தான் அந்த கடன் தொகைகளை செலுத்தி வருகிறார்கள் என்றால், சரியல்ல. நான் கடன் தொகைக்காக ரொக்கமாக பிரதிவாதிகளிடம் பணம் கொடுத்து வந்தேன். தற்போது கொடுக்கவில்லை. நான் பிரதிமாதம் ரூ.7,000/– வீதம் பிரதிவாதிகளிடம் பணம் கொடுத்து வந்தேன். மேற்படி வீதம் 2020 வரை தொகை கொடுத்து வந்து அதன் பிறகு தொகை கொடுப்பதை நிறுத்திவிட்டீர் என்றால், சரிதான்.

4. நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் 575, சத்துவாச்சாரி வீடு தங்கள் பெயரில் தங்களுடைய இளைய அண்ணன் விநாயகம் பெயரிலும் கூட்டாக வாங்கப்பட்டது என்றால், சரிதான். அந்த சொத்தை தாங்களும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து கடன் வாங்கி கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளீர் என்றால், சரிதான். மேற்சொன்ன வங்கி கடனுக்கு விநாயகம் கணக்கிலிருந்து தான் தொகை செலுத்தப்பட்டுள்ளது என்றால், சரிதான். தாங்கள் 2ம் பிரதிவாதியிடம் கடனை திருப்பி செலுத்துவதற்கு கொடுத்த தொகைக்கு ரசீது எதுவும் தாக்கல்செய்யவில்லை என்றால், சரிதான். மேற்சொன்ன கதவு எண் 575 கொண்ட வீட்டில் தாங்கள் மட்டும் தான் குடியிருக்கிறீர் என்றால், சரிதான். அந்த சொத்தில் தங்களுக்கு

அரைவரிசை பாத்தியம் இருப்பதாக தாவாவில் குறிப்பிட்டு சொத்தை சேர்த்து பரிகாரம் கேட்கவில்லை என்றால், சரிதான். விநாயகம் வாய்மொழியாக அந்த வீட்டில் உள்ள உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளீர் என்றால், சரிதான். 2ம் பிரதிவாதி அந்த சொத்து குறித்து செட்டில்மெண்ட எழுதி கொடுத்ததாக கூறியுள்ளதற்கு எவ்வித ஆவணமும் இல்லை என்றால், சரிதான்.

5. மேற்சொன்ன கதவு எண் 575 கொண்ட வீட்டிற்கு மேற்கு பக்கம் இருந்த 2096 சதுர அடி சொத்தை தாங்களும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து ஒரு முத்துகிருஷ்ணன் என்பவருக்கு விற்று 03.06.2020 தேதியில் கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளீர் என்றால், சரிதான். 3 பேரும் சேர்ந்தார் போல் கூட்டாக கடன் இருந்ததாக என்றாலும் கடன் இருந்ததை பிரதிவாதிகள் சேர்ந்து அடைத்தார்கள் என்றாலும், சரியல்ல. மேற்சொன்ன 2096 சதுரஅடி கொண்ட வீட்டுமனையை விற்பனை செய்த போது அந்த கிரையபத்திரத்தில் கிரைய தொகையை பெற்றுக்கொண்டதாக கையொப்பம் செய்துள்ளீர் என்றால், பணம் எனக்கு கொடுக்கவில்லை, ஆனால் அந்த வீட்டை என் பெயருக்கு மாற்றி கொடுப்பதாக சொன்னார், ஆனால் இதுவரை மாற்றி கொடுக்கவில்லை. மேற்சொன்ன 2096 சதுரஅடி சொத்தை விற்ற தொகை முழுவதையும் 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதால் அதில் பாதியை தங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும், சரிதான்.

6. 10.03.2025 ல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு கொடுக்கப்பட்ட CSR ல் தாங்கள் தையல் தொழில் செய்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் ஆயில் கடை நடத்துவதாக குறிப்பிடவில்லை என்றாலும், முதலில் ஆயில் தொழில் தான் செய்தேன், சரியாக நடக்காததால் பின்னாலில் தையல் தொழில் செய்தேன். தாவா சொத்து வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட விவரத்தை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிந்த நேரம் : 12.13 P.M

சாட்சி இன்று 14.07.2026 ல் திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.